# ∴பிரீடா கொரயா விருதுகள் 2024
## அறிமுகம்

காலஞ்சென்ற கலாநிதி காமனி கொரயாவின் அன்னையான திருமதி ∴பிரீடா கொரயாவின் நினைவாக காமனி கொரயா நிதியத்தினால் 2023ஆம் ஆண்டு ∴பிரீடா கொரயா விருதுகள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மகளிருக்கு வலுவூட்டுவது என்பதே இத் திட்டத்தின் அடிநாதமாகும். உறுதிப்பாடு மற்றும் படைப்புத் திறன் என்பனவற்றின் ஊடாக தம்மை நிலை நிறுத்திக் கொள்ளும் மகளிர், தமது குடும்பங்களை, பிரச்சினைகள், தடைகள், சவால்களைத் தாண்டி, சமூகத்தில் ஒரு உயர்வான இடத்துக்கு இட்டுச் செல்வதன் மூலம் வறுமையை வெல்கிறார்கள். இத்தகைய தன்னெழுச்சி கொண்ட மகளிரை அடையாளம் கண்டு வெகுமதிகளை வழங்கி ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். இத்தகைய பெண்களின் செயற்பாடுகள், இவர்களைப் போன்ற ஏனைய மகளிருக்கும் இதே பாதையில் பயணிப்பதற்கு தூண்டுகோள்களாக இருக்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இன்றைய காலப்பகுதியில், ஒவ்வொரு குடிமகனும் நாட்டின் பொருளாதார மீட்சிக்காக ஏதேனும் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். இந்த வட்டத்துள், பெண்களின் செயற்பாடுகள் மிக முக்கியம். எனினும் தற்போது மொத்த உழைப்பாளர் தொகையில் மகளிரின் பங்கு 33 சதவீதம் மட்டுமே. அதேசமயம், பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. எனவே, அவர்களின் குடும்பங்களுக்கு தேவையானவற்றை வழங்குதல், தமது பிள்ளைகளை கவனித்துக் கொள்ளல் மற்றும் வீட்டு வேலைகளை செய்தல் என பல பொறுப்புகளை அவர்கள் சுமக்க வேண்டியதாகிறது. இத்தகைய பொறுப்புகள் மற்றும் இன்னும் பல காரணங்களினால் நாட்டின் வளர்ச்சிக்கு அவர்களால் வழங்கக்கூடிய பங்களிப்பானது குறைந்து விடுகிறது.

∴பிரீடா கொரயா விருதுகள் 2023 போட்டி, ஆய்வை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட ஒரு போட்டி. மகளிரை மேலும் சக்தி கொண்டவர்களாக்கும் பல புதிய வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்ததோடு நாட்டின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கு அர்த்தமுள்ளதும் உற்பத்தி சார்ந்ததுமான பங்களிப்பை வழங்கும் வகையில் அவர்களைத் தயார்படுத்தவும் செய்தது.

### இரண்டாம் கட்டம் - ∴பிரீடா கொரயா விருதுகள் 2024

∴பிரீடா கொரயா விருதுகள் 2024 போட்டி கடந்த வருடம் நடைபெற்ற 2023 போட்டியை அடியொட்டியதாகவே நடத்தப்படுகிறது. முன்மாதிரியான பெண் மற்றும் அவரைப் பற்றி எழுதியவர் அடையாளம் காணப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடந்த வருட போட்டி முடிவில் எமக்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம், இப் பெண்களின் பிரச்சினைகள் போதுமான அளவில் தீர்க்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அறிய முடிந்தது. எனவே, ∴பிரீடா கொரயா விருதுகள் 2024, இப் பெண்களின் பிரச்சினைகள் மற்றும் சவால்களை எப்படித் தீர்க்கலாம் என்பது பற்றி அப் பெண்களிடமும் சம்பந்தப்பட்டவர்களிடமும் எழுத்தாளர்கள் ஊடாக உரையாடல்களை நிகழ்த்தும். இப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தீர்வுகளையும் அதற்கான வழிமுறைகளையும் கண்டறிந்து கொள்கை வகுப்பாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட நபர்கள் /

நிறுவனங்களுக்கும் அவை அறியத்தரப்படும். எதிர்காலத்தில் கிராமத்து மகளிர் சவால்களை சந்திக்கும் வகையில் வலுவூட்டுவதற்கு இது உதவும்.

**மையக்கரு**

**எழுத்தாளர்களுக்கான போட்டி:**

ஒரு குடும்பத்தின் சமூக அந்தஸ்து, வாழ்க்கைத் தர அபிவிருத்தி என்பனவற்றை உயர்த்துவதிலும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிலும் பெண்கள் முக்கிய பங்காற்றுகிறார்கள் என்பது வெளிப்படையானது. அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எவ்வாறு சமாளித்து வெற்றி பெறுகிறார்கள் என்பதை விளக்கும் ஆய்வுக் கட்டுரைகள், இவ்வாறான சவால்களை எதிர்நோக்கும் ஏனைய பெண்களுக்கு முன்மாதிரி படிப்பினைகளாக அமையும். மேலும் பொதுப்படையாக சமூகத்தின் மேன்மை கருதி எதிர்காலத்தில் கொள்கைகளை வகுக்கவுள்ள கொள்கை வகுப்பாளர்களுக்கு இக் கட்டுரைகள் பயனுள்ள வகையில் வழிகாட்டவும் முடியும்.

எனவே, இத்தகைய பெண்மணிகளை அல்லது குழுவாக இணைத்து அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டுள்ள மகளிர்மாருடன் நேரிடையாக பேசுவதன் ஊடாக எழுத்தாளர்கள் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். இக் கட்டுரைகளின் அடிப்படை, அப் பெண்கள் சந்தித்த சவால்கள், தடைகள், பிரச்சினைகளை மையப்படுத்தியதாகவும் எப்படி அவற்றை வெறிறி கொண்டார்கள் என்பதாகவும் அமைந்திருக்க வேண்டும்.

<u>கருப்பொருள் - உத்வேகமுடைய பெண்மணி</u>

∴பிரீடா கொரயா விருதுகள் 2024 போட்டி மாகாண மட்டத்தில் நடத்தப்படும்.

**எழுத்தாளர்களுக்கான தகுதிகள்**

1. இலங்கைக் குடிமக்கள் அனைவருக்குமானது. 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். ஓய்வு பெற்ற எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம். வேறு நிபந்தனைகள் இல்லை.
2. எழுத்தாளர்கள் தான் எந்த மாகாணத்தைச் சேர்ந்த பெண்ணின் கதையை எழுதுகிறாரோ அந்த மாகாணத்தை சேர்ந்தவராக அவர் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.
3. எழுத்தாளர்கள் எந்த மாகாணத்தைச் சேர்ந்த பெண்களின் கதையையும் எழுதலாம். போட்டி நிபந்தனைகளுக்கு அமைவாக அக் கட்டுரைகள் இருத்தல் அவசியம்.
4. ஒரு பெண்ணைப் பற்றிய ஒரு கட்டுரை மட்டும் சமர்ப்பிக்கப்பட முடியும்.

**மையப்படுத்த வேண்டிய பிரிவு**

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட பெண் / சமூக அபிவிருத்தித் திட்டங்களில் குழுக்களாக இயங்கும் மகளிர் என்போர் தமது நடவடிக்கைகள் மூலம் தமது குடும்ப நிலையை குறிப்பிடத்தக்க அளவு உயர்த்தியுள்ளதோடு தற்போது நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் தமது பங்களிப்பை செலுத்தி வருபவர்கள்.

**கட்டுரைகளுக்கான பிரிவுகள்**

ஒரு பெண்ணின் வெற்றிகரமான செயற்பாடுகள் ஏனையோருக்கு முன்மாதிரியானதாக உள்ளதா என்பதை எழுத்தாளர் ருசுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் கட்டுரைகளை கீழ்க்கண்ட பிரிவுகளில் சமர்ப்பிக்கப்பட முடியும்:

1. குடும்ப ஈடேற்றம்
2 தொழில்துறை (சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்)
3. மிகச் சிறந்த சாதனை

**குடும்ப ஈடேற்றம்:** இப் பிரிவின் கீழ் தாள முடியாத கஷ்டங்களை அனுபவித்ததோடு பெரும் சவால்களை முறியடித்த தற்கால குடும்பத் தலைவியர் பற்றி சொல்லப்படவேண்டும். அவர்களிடம் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரு வெற்றிக்கதை இருக்க வேண்டும்.

**தொழில் முயற்சி:** தமது படைப்புத் திறன் மற்றும் தளரா முயற்சிகள் ஊடாக சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு அவற்றில் குறிப்பிடத்தக்க அளவில் வெற்றி பெற்ற பெண்கள் பற்றியதாக இருக்க வேண்டும். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் சிறிய முதலீட்டுடன் ஈடுபட்டு உற்பத்தி அபிவிருத்தி, வர்த்தகத்தை நன்கு புரிந்து கொண்டு, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி, வெளிநாட்டு வருமானம் பெற்று மேலும் சூழல்மாசு ஏற்படுத்தாத, புதுமையான முறைகளைக் கையாண்டு குறிப்பிடத்தக்க உயர்வை அடைந்தவர்கள் இந்தப் பிரிவுக்குள் அடங்குவர்.

**மிகச் சிறந்த சாதனையாளர்:** உள்ளூர் அல்லது உலகளாவிய அறிமுகத்துடன் புகழ்பெற்ற பெண்கள். தடைகள், பிரச்சினைகள் மற்றும் சவால்களை வென்று உள்ளூர் அல்லது சர்வதேச பரப்பில் அங்கீகாரம் பெற்றது எப்படி என்பதை விவரிப்பதாக இருக்க வேண்டும். விஞ்ஞானம், தொழில்நுட்பம், விளையாட்டு, கலை, பாதுகாப்பு, கல்வி அல்லது ஏதாவது குறிப்பிடத்தக்க துறையில் சிறப்புத் தகுதி வென்றதன் ஊடாக அங்கீகாரம் பெற்றோர் இதில் உள்ளடங்குவர்.

பதிவு செய்தல்

- கீழ்கண்ட வழிகளில் விண்ணப்பதாரர்கள் இப்போட்டிக்கான எழுத்தாளர்களாகத் தம்மைப்பதிவு செய்து கொள்ள முடியும்.

1. தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் பத்திரிகை விளம்பரங்களின் ஊடாக.
2. பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்விசார் நிறுவனங்களுக்கு எழுத்தாளர்களை எழுதுவதற்குத் தூண்டும் போஸ்டர்கள் அனுப்பி வைக்கப்படும்.
3. பெருமளவு மக்களை சென்றடையும் வகையில் முகநூலில் வெளியிடப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்கள்,
4. சிங்களம் மற்றும் தமிழில் இரண்டு தொலைக்காட்சி நேர்காணல்கள்

2024 ஜூலை 30 முதல் ஒகஸ்ட் 10ஆம் திகதிவரை வெளிவரவுள்ள மேற்படி அறிவித்தல்கள் மீது பங்குபெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் அவதானத்துடன் இருக்கவும்.

- சாதனைப் பெண்மணியை அடையாளம் கண்டு எழுத்தாளர்கள் தம்மை எழுத்தாளர்களாக பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும். அத்துடன் தான் எழுதவுள்ள கட்டுரையின் சாராம்சத்தை (ஒரு ஏ4 பக்கத்தில் வேர்ட் அல்லது PDF ஆக) அத்துடன் இணைத்திருக்க வேண்டும். கட்டுரையின் தரம் போட்டிக்குத் தகுதியானது தானா என்பதைத் தீர்மானிக்க இது உதவும்.

- தமது படைப்புகளை கணினி அச்சு செய்யும் போது 12 அளவு எழுத்துருவை பயன்படுத்த வேண்டும். ஆங்கிலத்துக்கு Times New Roman, சிங்களத்துக்கு ஸ்கோல பொத மற்றும் தமிழுக்கு பாமினி, Word மற்றும் PDF முறையில் அமைத்து அனுப்ப வேண்டும்.

- கையெழுத்தால் தயார் செய்யப்பட்ட படைப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

- தமிழ் மற்றும் சிங்கள படைப்புகள் Unicode இல் அனுப்பப்பட வேண்டும்.

<u>இறுதிக் கட்டுரைத் தெரிவு</u>

- நீங்கள் அனுப்பும் கதைச் சுருக்கங்களில் தெரிவு செய்யப்படுபவை தகுதி பட்டியலில் சேர்க்கப்பட்டு தெரிவு செய்யப்படும் எழுத்தாளர்களிடம் தங்கள் கட்டுரைகளை தயாரித்து போட்டிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

- போட்டித் தெரிவுக்காக நீங்கள் அனுப்பும் கட்டுரையுடன் கதை நாயகி மற்றும் சம்பந்தப்பட்டோர், நடைமுறை சாத்தியம் கொண்ட யோசனைகளாக அவர்கள்

கருதுபவற்றை குறிப்பிட வேண்டும். அத் திட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு உதவுவதாக இவை இருக்க வேண்டும்.

- உங்களுடைய ஆய்வுகளின் பொருட்டு காமனி கொரயா நிதியம் ஒரு தரவு தாளையும் மாதிரியையும் உங்களுக்குத் தரும். நீங்கள் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி சேகரித்த தகவல்களைப் பயன்படுத்தி அத்தாளை முழுமையாக நிரப்ப வேண்டும்.

- நீங்கள் எழுதப்போகும் கட்டுரை யாருக்கானதோ அவருடன் நேருக்கு நேர் உரையாடுவதன் மூலமும் மேலும் சம்பந்தப்பட்டவர்களுடனும் பேசிக் கிடைக்கப் பெறும் தகவல்களை எழுத்தாளர்கள் சேகரித்துக் கொள்ள வேண்டும்.

ஃபிரீடா கொரயா விருதுகள் 2023 போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் விருதுகளைப் பெற்றவர்களின் கதைகளை ஃபிரீடா கொரயா விருதுகள் 2024 போட்டிக்கு மீண்டும் சமர்ப்பிக்க முடியாது.

**விருதுகள்**

ஃபிரீடா கொரயா விருதுகள் 2024 போட்டியில் கலந்து கொள்ளும் எழுத்தாளர்களுக்கும் முன்மாதிரிப் பெண்களுக்கும் / சமூகம் சார்ந்த பெண்களின் வேலை திட்டங்களுக்கும் கவர்ச்சிகரமான பரிசில்கள் காத்திருக்கின்றன.

ஒவ்வொரு மாகாணத்துக்கும் கீழே தரப்பட்டுள்ள வகையில் தெரிவு செய்யப்படும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசில்கள் வெற்றி பெற்றவர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் வழங்கப்படும்.

<table>
<tr><th colspan="2">தெரிவாகும் பெண்மணி</th><th colspan="2">எழுத்தாளர்</th><th>மாகாணம்</th></tr>
<tr><td>01ஆம் பரிசு</td><td>ரூ. 400,000</td><td>01ஆம் பரிசு</td><td>ரூ. 200,000</td><td rowspan="4">1. மேல் மாகாணம்<br>2. மத்திய மாகாணம்<br>3. தென் மாகாணம்<br>4. வட மாகாணம்<br>5. கிழக்கு மாகாணம்<br>6. வட கிழக்கு மாகாணம்<br>7. வட மத்திய மாகாணம்<br>8. சபரகமுவ மாகாணம்<br>9. ஊவா மாகாணம்</td></tr>
<tr><td>02ஆம் பரிசு</td><td>ரூ. 200,000</td><td>02ஆம் பரிசு</td><td>ரூ. 100,000</td></tr>
<tr><td>03ஆம் பரிசு</td><td>ரூ. 100,000</td><td>03ஆம் பரிசு</td><td>ரூ. 50,000</td></tr>
<tr><td colspan="2"></td><td colspan="2"></td></tr>
</table>

**விதிகளும் நிபந்தனைகளும்**

1. கட்டுரைகள் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் சமர்ப்பிக்கப்பட முடியும்.

2. சமர்ப்பிக்கப்படும் சகல கட்டுரைகளும் எழுத்தாளரின் அசல் முயற்சியாக இருக்க வேண்டும்.

3. யாரைப்பற்றிய கதை எழுதப்படுகிறதோ அவருடைய அனுமதி அவசியம். தன்னுடைய கதை கட்டுரையாக எழுதப்படுவதற்கு சம்மதம் தெரிவிக்கும் எழுத்துமூல அனுமதி அக்கட்டுரையுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். கதை உரிமையாளர் தன் கதை தொடர்பான எல்லா அம்சங்களையும் அங்கீகரித்திருக்க வேண்டும்.

4. தெரிவு செய்யப்பட்ட கதை உரிமையாளரின் மற்றும் மகளிர் குழுக்களின் உண்மைத் தன்மை, சமர்பிக்கப்பட்ட கட்டுரைகளில் காணப்படும் தகவல்கள் காமனி கொரயா நிதியத்தின் குழுவினரால் பரிசீலனைக்கு உள்ளாக்கப்படும் என்பதோடு அக்குழு சம்பந்தப்பட்டவர்களை நேரிடையாக சந்திக்கும்.

5. சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் புள்ளி அடிப்படையிலான பரிசீலனை திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுக் குழுவினரால் சீர்தூக்கிப் பார்க்கப்படும். நிதியம் இதற்கென ஒரு குழுவை நியமிக்கும்.

6. வெற்றியாளர்களின் தெரிவானது விசேட மதிப்பீட்டுக் குழுவினால் முடிவு செய்யப்படும் என்பதோடு அதுவே இறுதித் தீர்மானமாக இருக்கும். இதை சவாலுக்கு உட்படுத்த முடியாது.

7. இம் முயற்சியின் போது எவருக்காவது ஏதாவது இழப்போ அல்லது சேதாரமோ ஏற்பட்டிருப்பின் அதற்கான பொறுப்பை காமனி கொரயா நிதியம் ஏற்றுக் கொள்ளாது.

8. சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகளின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்வதற்காக சம்பந்தப்பட்டவர்களைத் தொடர்பு கொண்டு சுதந்திரமான முறையில் தகவல்கள் மீள் சரிபார்க்கப்படும்.

**இறுதியாக சமர்பிக்கப்படும் கட்டுரைகள் கீழ்கண்டவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.** (மூன்று மொழிகளுக்கும் பொருந்தும்)

- 1500 – 2000 சொற்களுக்குள் அமைந்திருக்க வேண்டும்.
- சிங்களம் ஆங்கிலம், மற்றும் தமிழ் மொழிகளில் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட முடியும்.
- கட்டுரைகள் 12 எழுத்துரு, Word மற்றும் PDF முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- ஒரு கட்டுரையானது சிறந்த கட்டமைப்புடன் கூடிய ஆரம்பம், நடுப்பகுதி மற்றும் முடிவைக் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும்.
- எளிதாக விளங்கிக் கொள்ளும் வகையில் தெளிவான மொழிப் பிரயோகத்துடன் கட்டுரைகள் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- ஒவ்வொரு வசனமும் மூன்று வரிகளுக்கு மேற்படாததாக அமைந்திருக்க வேண்டும்.
- ஒவ்வொரு கட்டுரையும் ஒரு முன்மாதிரிப் பெண் அல்லது சமூகம் சார்ந்த மகளிர் குழுவொன்றின் செயற்பாடுகள் பற்றியதாக இருக்க வேண்டும்.
- ஒரு எழுத்தாளர் அவர் விரும்பினால் மூன்று பிரிவுகளின் கீழும், தனித்தனி கட்டுரைகளை சமர்ப்பிக்க முடியும்
- ஒவ்வொரு பிரிவின் கீழும் ஒரு எழுத்தாளர் ஒன்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுத முடியும்.
- கதை உரிமையாளரால் கூறப்பட்ட உண்மைத் தகவல்களின் அடிப்படையில் கட்டுரைகள் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**எழுத்தாளராக பதிவு செய்தல்**

இங்கே தரப்பட்டுள்ள பதிவுப் படிவத்தை நிரப்பி கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

shiraneemanager@gmail.com
chandanacoordinatorfca@gmail.com
amcerm.gcf@gmail.com

அல்லது பதிவுத் தபாலில்,
Shiranee Dissanayake,
Consultant,

Gamini Corea Foundation,
No. 21, Horton Place,
Colombo - 07.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

இலக்கம் (தேசிய அடையாள அட்டை இலக்கம்) ……………………………………

Gamani Corea Foundation
Freda Corea Awards
2023

## ஃபிரீடா கொரயா விருதுகள் 2024

## எழுத்தாளர்களுக்கான பதிவுப் படிவம்

மேற்படி போட்டியில் எழுத்தாளராக பதிவு செய்து கொள்வதற்கு விரும்புவதால் இத்துடன் கேட்கப்பட்டுள்ள பிரகாரம் என்னைப் பற்றிய தகவல்களை சமர்ப்பிக்கிறேன்.

எழுத்தாளரின் பெயர் :
தபால் முகவரி :
மின்னஞ்சல் முகவரி :
தொடர்பிலக்கம் :
தேசிய அடையாள அட்டை இல. / கடவுச்சீட்டு இல. :
(போட்டோ பிரதிகளை இணைக்கவும்)
மாகாணம் :
மாவட்டம் :

-----------------------------------------------------------------------------------------

கட்டுரை நாயகியின் பெயர் :
தபால் முகவரி :
மின்னஞ்சல் முகவரி :
தொடர்பிலக்கம் :
தேசிய அடையாள இல. / கடவுச்சீட்டு இல.
(போட்டோ பிரதிகளை இணைக்கவும்)
மாகாணம் :
மாவட்டம் :
கிராம சேவகர் பிரிவு :

**கட்டுரைச் சுருக்கம்**

இத்துடன் கட்டுரையின் சுருக்கம் (………………………………………………………) இணைக்கப்பட்டுள்ளது.

இத்துடன் …………………………………………..யின் (கதை உரிமையாளர்) எழுத்து மூல அனுமதி இணைக்கப்பட்டுள்ளது. இது இக்கட்டுரை எழுதுவதற்கான அவரது அனுமதி. ஃபிரீடா கொரயா விருதுகள் 2024 போட்டிக்கான நுழைவாக இதை சமர்ப்பிக்கிறேன்.

…………………………………
எழுத்தாளரின் கையெழுத்து

திகதி :

கதை உரிமையாளரின் அனுமதி :

…………………………. என்ற பெயருடைய தேசிய அடையாள அட்டை இல. ………………… கொண்ட நான் …………………. என்ற பெயரும் …………… இலக்க தேசிய அடையாள அட்டையும் கொண்டவருக்கு என்னுடைய கதையை ஃபிரீடா கொரயா விருதுகள் 2024 போட்டிக்கு அனுப்புவதற்கு என்னுடைய அனுமதியை இத்துடன் வழங்குகிறேன்.

……………………………..…
கையெழுத்து

திகதி :